உ

சிவமயம்

தெல்லிப்பழை

# திரு. கந்தையா தணிகாசலம்

அவர்களின்

# நினைவுச் சுடர்



23 - 9 - 1989

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திரு. கந்தையா தணிகாசலம் அவர்கள்



தோற்றம் :
24 – 3 – 1919

மறைவு :
15 - 8 – 1989

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

தெல்லிப்பழை

# திரு. கந்தையா தணிகாசலம்

அவர்களின்

# நினைவுச் சுடர்



23 – 09 – 1989

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமகள் அழுத்தகம், சுன்னாகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# திருவருட் பாடல்கள்

## தேவாரம்

புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி
யறிவழிந்திட் டைம் மேலுந்தி
அலமந்த போதாக வஞ்சேலென்
றருள்செய்வா னமருங்கோயில்
வலம்வந்த மடவார்கள் நடமாட
முழவதிர மழையென்றஞ்சிச்
சிலமந்தி யலமந்து மரமேறி
முகில்பார்க்குந் திருவையாறே.

## திருவாசகம்

அன்றே என்றன் ஆவியும் உடலும் உடைமை எல்லாமுங்
குன்றே அனையாய் என்னைஆட் கொண்டபோதே கொண்டிலையே
இன்றோர் இடையூ றெனக்குண்டோ எண்தோள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழை செய்வாய் நானோ இதற்கு நாயகமே.

## திருவிசைப்பா

நையாத மனத்தினனை நைவிப்பா னித்தெருவே
ஐயாநீ யுலாப் போந்த வன்றுமுத லின்றுவரை
கையாரத் தொழுதருவி கண்ணாரச் சொரிந்தாலுஞ்
செய்யாயோ வருள்கோடைத் திரைலோக்கிய சுந்தரனே.

## திருப்பல்லாண்டு

சொல்லாண்ட சுருதிப் பொருள்
சோதித்த தூய்மனத் தொண்டருள்ளீர்
சில்லாண்டிற் சிதையுஞ் சில
தேவர் சிறுநெறி சேராமே
வில்லாண்ட கனகத் திரள்மேரு
விடங்கன் விடைப்பாகன்
பல்லாண் டென்னும் பதங்கடந்
தானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்
பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும்
பிறப்பு உண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும்
வேண்டும் நான் மகிழ்ந்துபாடி
அறவா ! நீ ஆடும்போது
உன்அடியின்கீழ் இருக்க என்றார்.

## திருப்புகழ்

அகரமுமாகி அதிபனுமாகி அதிகமுமாகி — அகமாகி
அயனெனலாகி அரியெனலாகி அரனெனலாகி — அவர்மேலாய்
இகரமுமாகி எவைகளுமாகி இனிமையுமாகி — வருவோனே
இருநிலமீதில் எளியனும்வாழ எனதுமுனோடி — வரவேணும்
மகபதியாகி மருவும்வலாரி மகிழ்கழிகூரும் — வடிவேலா
வனமுறைவேடன் அருளியபூஜை மகிழ்கதிர்காமம்—உடையோனே
செகணசேகு தகுதிதிதோதி திமியெனஆடும் — மயிலோனே
திருமலிவான பழமுதிர்சோலை மலமிசைமேவு — பெருமானே.

## அபிராமி அந்தாதி

ஆசைக் கடலி லகப்பட் டருளற்ற வந்தகன்கைப்
பாசத்தி லல்லற் படவிருந் தேனை நின் பாதமெனும்
வாசக் கமலந் தலைமேல் வலியவைத் தாண்டுகொண்ட
நேசத்தை யென்சொல்லு வேனீசர் பாகத்து நேரிழையே.

## துர்க்கா துதி

ராகு தேவனின் பெரும் பூஜை ஏற்றவள்
ராகு நேரத்தில் என்னைத் தேடி வருபவள்
ராகு காலத்தில் எந்தன் தாயை வேண்டினேன்
ராகு துர்க்கையே என்னை காக்கும் துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே.

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## தெல்லிப்பழை

# திரு. கந்தையா தணிகாசலம் அவர்களின் வாழ்க்கைச் சுருக்கம்

**ஜனன ஊர் :**

செந்நெறியும், செந்தமிழும் செழித்து வளர்ந்து வரும் பதியாக தெல்லிப்பழை விளங்குகின்றது. வரலாறுகாணுத புகழ்பூத்த துர்க்கை அம்மன் கோயில் கொண்டு எழுந்தருளி இருப்பதனுல் தெல்லிப்பழைக்கு ''துர்க்காபுரம்'' என்னும் பெயர் பெறுகின்றது. இத்துடன் விநாயகர் ஆலயங்களும், முருகன் ஆலயங்களும், அம்பாள் ஆலயங்களும் இங்கு உள்ளமையால் மக்கள் ஆலயவழிபாடுகளிலும், ஆலய தொண்டுகளிலும் பங்குகொண்டு சிறந்து விளங்குகின்றனர்.

**ஜனனம் :**

தெல்லிப்பழையில் பிரசித்திபெற்ற தெருவேலைப்பகுதித் திணைக்கள ஓவசியர் திரு. இளையதம்பி கந்தையா அவர்களுக்கும், முத்துக்குமாரு செல்லம்மா அவர்களுக்கும் ஆண்மகவாக திரு. க. தணிகாசலம் அவர்கள் ஜனமானுர். இவரின் தந்தையார் திரு. இ. கந்தையா அவர்கள் மட்டக்களப்பு ஏறுவூரில் உத்தியோகம் பார்த்தகாலத்தில் 1919ஆம் ஆண்டு மார்ச்மாதம் 24ஆம் திகதி மூலநட்சத்திரதில் ஜனனமானுர். இவரோடு உடன் பிறந்தோர் மூவர். ஒருவர் ஆண் சகோதரர் திரு. க. சரவணமுத்து அவர்களும், மற்றவர்கள் பெண் சகோதரிகளான திருமதி தங்கம்மா விஜயரத்தினம், திருமதி வேதநாயகி துரைச்சாமி ஆகியவர்கள்.

**கல்வி :**

திரு. க. தணிகாசலம் அவர்கள் தமது ஆரம்பக்கல்வியை பிரசித்தி பெற்ற தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் ஆரம்பித்தார்கள். கல்லூரியிலே கல்விகற்றலில் மட்டுமல்லாது விளையாட்டுத் துறையிலும் முன்னேடியாகக் காணப்பட்டார்கள். இதனுல் திரு. I. P. துரை ரத்தினம் போன்ற பெருமக்களிடம் நன்மதிப்பைப் பெற்றுர்கள். மேலும் இக்கல்லூரியில் உள்ள ''டிக்சன்'' இல்லத்துக்கு தலைவராக தெரிந்து எடுக்கப்பட்டார்கள். விளையாட்டுத்துறைகளிலும் மிகுந்த சாதனைகளை நிலைநாட்டினுர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உத்தியோகம் :**

1938ஆம் ஆண்டு தமது உத்தியோகத்தொழிலை ஆரம்பித்தார். இவர் நுவரெலியாவில் உள்ள தனியார் நிறுவனமொன்றில் சேர்ந்து முகாமையாளராகப் பணிபுரிந்தார்.

மேலும் அரசாங்க பதவிபெற்று நீர்ப்பாசன திணைக்களத்தில் களஞ்சியப் பொறுப்பாளராக 1940ஆம் ஆண்டு பொறுப்பேற்றுக் கொண்டார்கள். இப்பதவி வகித்தகாலத்தில் பொல்காவலை, குருநாகல், வவனிக்குளம், ஒட்டுசுட்டான், புத்தளம், யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் களஞ்சியப் பொறுப்பாளராக பணிபுரிந்தார்கள். இவ்வாறாக பணிபுரிந்து பிரதம களஞ்சியப் பொறுப்பாளராக பதவி உயர்வு பெற்று 1976ஆம் ஆண்டு மார்ச்மாதம் ஓய்வுபெற்றார்.

**திருமணம் :**

1952ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் மாதகலில் உள்ள திரு. தட்சணாமூர்த்தி முத்துப்பிள்ளை தம்பதிகளின் புத்திரி புவனேஸ்வரி என்னும் மங்கை நல்லாள் திரு. க. தணிகாசலம் அவர்களுக்கு மனைவியானார். இவர்களின் திருமண வைபவம் கொழும்பு முத்துவால் பிள்ளையார் கோவிலில் நிகழ்ந்தது.

**பிள்ளைகள் :**

இவர்கள் பெற்ற திருமணத்தின் பெறுபேறாக, நந்தகுமார், சிவகுமார், குமரன் தணிகாசலம், விஜயகுமார் என்னும் பெயர்களை யுடைய நான்கு ஆண்பிள்ளைகளையும் நந்தினி, நளாயினி என்ற இரு பெண்பிள்ளைகளையும் பெற்றார்கள். இவர்கள் தந்தையின் வழிநின்று ஒழுக்கமும் பணிவும் உடையவர்களாக வாழ்ந்து சிறப்புறுகிறார்கள். கமலநாதன், யோகராணி ஆகியோரை நன்மருமக்களாகப் பெற்றவர் இவர். அத்துடன் பேரன் பேத்திகளாலும் பொலிவு பெற்று வாழ்ந்த சிறப்பு அமரர் அவர்களுக்கு உண்டு. கஜனன் என்ற பெயர் கொண்ட பேரனையும் திரியம்பகி என்ற பெயர் கொண்ட பேர்த்தியையும் கொண்ட பெருமை இவருக்கு உண்டு.

**ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத் தொடர்பும் தொண்டும் :**

1970ஆம் ஆண்டளவில் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ் தானத்துடன் இணைந்து கொண்டு சமயப்பணி புரிய ஆரம்பித்தார்கள் 1977இல் தேவஸ்தான நிர்வாக சபையின் இணைச்செயலாளராக தெரிவு செய்யப்பட்டார். மேற்படி தேவஸ்தானத்தின் வளர்ச்சியில் முக்கிய பங்கு கொண்ட இவர்கள், உட்கோயில் கொட்டகை வேலைகள், சித்திரத்தேர், இராசகோபுரம், பக்தர்விடுதி, அன்னதான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்டபம், மகளிர்இல்ல மாடிக் கட்டிடம் போன்ற திருப்பணி வேலைகளில் தேவஸ்தானத் தலைவர் அம்மாவுக்கும், நிர்வாகசபையினர்களுக்கும் உறுதுணையாக வலதுகை, இடதுகையாக முன்நின்று தொண்டாற்றினுர்கள். மேலும் 1981 மகாகும்பாபிஷேக விழாவிலும், சைவ சித்தாந்த மகாநாடு நிகழ்ச்சியிலும், சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் மணிவிழா நிகழ்ச்சியிலும் முக்கிய பங்கு கொண்டு உழைத்தார்கள்.

தெல்லிப்பழை கட்டுப்பிட்டி சுடலை அபிவிருத்திச் சங்கத்தில் சேர்ந்து சுடலையை முன்மாதிரியாக கொண்டு வருவதில் வெற்றி கண்டார்கள்.

**சிவபதப் பேறு:**

கடந்த ஒருவருடமாக நோய்வாய்ப்பட்டிருந்த திரு. க. தணிகாசலம் அவர்கள் 1989ஆம் ஆண்டு துர்க்கை அம்பாள் பெருவிழாவான 15ஆம் திகதி ஆடிக் கடைசிச் செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்தார்கள். அன்னுரின் ஆத்மா சாந்திபெற எல்லாம்வல்ல அம்பாளைப் பிரார்த்திக்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

கா்மவீரா்

# திரு. தணிகாசலம் அவா்கள்

## ஆடிக் கடைசிச் செவ்வாய் (15-8-89) அன்று அம்பாளின் திருவடியை அடைந்துவிட்டார்

### "எல்லாம் வெற்றி" என்று ஒலிக்கும் நா இன்று மௌனமாகிவிட்டது.

தெல்லிப்பழை அருள்மிகு ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் இணைச் செயலாளரில் ஒருவரான திரு. கந்தையா தணிகாசலத்தின் மறைவு குறித்து எமது தேவஸ்தானம் ஆழ்ந்த கவலையடைந்துள்ளது. தனது ஆளுமையையும் ஆற்றலையும் கொண்டு பதினெட்டு வருடம் கா்மவீரராகப் பணிபுரிந்தவர் இப் பெரியார். அவருடைய பதவிக் காலத்திலே இவ்வாலயம் அடைந்த முன்னேற்றங்கள் அளப்பில. திருப்பணிகள், கோயில் ஒழுங்குகள், நிதிசேகரித்தல், கட்டுப்பாட்டை நிலவச்செய்தல், தலைமைப்பீடத்தின் மதிப்புக்கு முழுஆதரவாக இருந்து கருமமாற்றல் ஆகிய அனைத்திலும் திரு. தணிகாசலம் அவர்கள் முதன்மையான பங்கெடுத்துக் கொண்டார். சித்திரத்தேர், இராச கோபுரம், கலியாணமண்டபம், தீர்த்தத்தடாகம், மகளிர்இல்லம் அனைத்தும் இவர் செயலாளராகப் பணிபுரிந்த காலத்திலேயே உருவாக்கப்பட்டவை. எம்மைப் போல் இருந்தும், நடந்தும் பணிசெய்தவரல்லர் இவர். ஓடி ஓடிப் பணி செய்த உத்தமர்; உறங்காமல் பணி செய்த தொண்டர்; கண்ணியமாகப் பணி செய்த புண்ணியவாளர்; மனவுறுதியோடு அம்பாளை முன்வைத்து ஆலயப்பணிகளை மேலோங்கச் செய்த அம்பாள் அடித்தொண்டர்.

நான் இப்பெரியாரை "மாமா" என்று அன்புடன் அழைப்பேன். தேவஸ்தானத்தில் அனைவரும் "மாமா" என்றே அழைப்பது வழக்கம். எல்லோர்க்கும் அவர் இனியவர்; எவருடைய இன்பதுன்ப நிகழ்ச்சியிலும் முன்னின்று பங்கு கொள்வார். எந்த ஒரு கருமத்தையும் அவரிடம் ஒப்படைத்து விட்டால் முடிவில் அனைவரும் வியக்கத் தக்கதாக நிறைவேற்றி முடிப்பார். பேரும் புகழும் தலைவரென்ற ரீதியில் எனக்குப் பிரமாதமாகக் கிடைக்கும். ஆனால் இதற்குச் சூத்திரதாரி அவர் தான் என்பதையும் அறியாதவர்களில்லை. 1981ம் ஆண்டு சென்னை சைவசித்தாந்த மகா சமாயத்தின் எழுபத்தைந்தாம் ஆண்டு பவள விழா எங்கள் ஆலயமுன்றிலில் நடைபெற்ற போது பல்லோரும் வியக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கத்தக்க முறையில் மூன்றுநாள் நிகழ்ச்சிகளையும் சிறப்புற நடைபெற அச்சாணியாக விளங்கியவர் இப்பெரியார். தமிழ்நாட்டிலிருந்து மகா நாட்டுக்கு வருகைதந்த பேராளர்கள் முந்நூறுபேரையும் தலைமன்னார் துறைமுகத்திற்கு சென்று வரவேற்றது தொடக்கம் ஒரு வாரகால நிகழ்ச்சிகளின் பின் வழியனுப்பு வைபவம் வரை இனிதாகவும் எல்லார் உள்ளத்திலும் இடம்பெறக் கூடியதாகவும் நடத்தி வெற்றி கண்டவர் இப்பெரியார்.

''எல்லாம் வெற்றி'' என்பது இவருடைய தாரகமந்திரம். அது பூரணமாக எமது தேவஸ்தானத்துக்குப் பொருத்தமாக அமைந்தது. ஆறுபிள்ளைகளுக்குத் தந்தையாகவும் அடிசிற்கினிய அன்புடைமனை யாளைப் பெற்றவராகவும் சிறந்த ஒரு இல்லறத்தானாகவும் வாழ்ந்த போதிலும் இலௌகீகமும் இல்லறசுகமும் இவரை மூழ்கடிக்கவில்லை. அம்பாளின் திருவருள்தான் இவரை வளைத்துக் கொண்டது என்று கூறினால் அது முற்றிலும் பொருந்தும்.

அமரர் அவர்களின் இறுதி ஆசை தெல்லிப்பழை துர்க்காபுரம் மக்களின் அந்திமக்கிரியை நடைபெற இருக்கும் சுடுகாட்டைத் திருத்தி மண்டபம், கிணறு, சுற்றுமதில் ஆகியவற்றை நல்லபடி அமைத்து இறுதியாத்திரை செய்பவர்களின் ஆத்ம திருப்தியை ஏற்படுத்த வேண்டும் என்பதே. ஓராண்டுகாலம் நோய் வாய்ப்பட்டிருந்தமையால் இந்த விருப்பம் நிறைவேற்ற முடியவில்லை. என்றாலும் அவருடைய கனவைக் கூடியகெதியில் நனவாக்க எமது தேவஸ்தானமும் குறிப்பிட்ட சுடு காட்டு அபிவிருத்திச்சங்கமும் நடவடிக்கை எடுக்கும் என்பது எமது நம்பிக்கை. மேலும் அம்பாள் அடித்தொண்டர் திரு. தணிகாசலம் ஐயா அவர்களின் திருநாமம் என்றும் நின்று நிலவுக எனப் பிரார்த் தித்து அமைகின்றேன். அவர்கள் குடும்பத்துக்கு எமது தேவஸ்தானத் தின் சார்பில் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கிறேன்.

**தங்கம்மா அப்பாக்குட்டி** J. P.
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தலைவர்
தெல்லிப்பழை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

# அமரர் கந்தையா தணிகாசலத்தின் சால்பு

" வினைத்திட்பம் என்பது ஒருவன் மனத்திட்பம்
மற்றைய எல்லாம் பிற "

அமரர் கந்தையா தணிகாசலம் அமரத்துவம் அடைந்து விட்டார் என்று அறிந்தவுடனே பல மக்களின் மனதில் ஒரு பெரும்திகில்.

இதற்குக் காரணம் தான் யாதோ ?

இயற்கை எய்தல் உலக வழக்கில் ஒன்று. ஆனல் மக்களுள் ஒரு மாணிக்கத்தை இழந்தால் அது ஆருத் துயரத்தைக் கொடுக்கும். அமரர் தணிகாசலத்தில் இருந்த அரும் பெரும் குணங்கள் யாவை?

முதலாவதாக அவரின் பண்பு. ஒருவர் தன் தோற்றத்தினல், தன் சிந்தனையால், தன் சொல்லினல், தன் செயலினல் மக்களுக்கு இன்பத்தைக் கொடுக்க வல்லுனராயின் அவர் பண்புடையராவர்.

அமரர் தணிகாசலத்தின் கம்பீரமான தோற்றம் நன்மைகளை நாடும் சிந்தனைகள், பணிவோடு கூடிய நிதார்த்த வார்த்தைகள், நீதியான செயற்பாடுகள் அம்மன் அடியார்களை அவர்பாற் கவர்ந்தது. அதனல் அவர்களும் அவர் வேண்டியன வேண்டியாங்கு செய்தனர்.

நல்லன செய்தற்கு இருபெருங் குணங்கள் வேண்டும். " இன்னது செய்தல் நன்று " என்று தீர்மானிக்கும் ஆற்றல் இருந்தது. ஆனல் சிந்தித்து செயலாற்றும் வினைத்திடபம் அமரர் தணிகாசலத்திடம் மிளிர்ந்தது.

அறங்காவல் குழுவினரும் அமரர் தணிகாசலமும் நல்லதொரு வெளிச்சத்தை ஏற்றி உள்ளனர். அது தொடர்ந்து சுடர்விட்டெரியும். அதைச் செய்வதற்கு பல நன்மக்கள் தோன்றியுள்ளனர். தோன்று வார்கள்.

அமரர் தணிகாசலத்தின் ஆத்மா இறைவனடி சேர்ந்து சாந்தி அடைய பிரார்த்திப்போம்.

சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

**ந. சிவஞானம்**
ஓய்வுபெற்ற அதிபர்

வட்டுக்கோட்டை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி கோவில்
### ஆதீனகர்த்தாவும் பிரதம சிவாச்சாரியாரும் ஆகிய
## மஹாராஜஸ்ரீ சு. து. ஷண்முகநாதக் குருக்கள்
வழங்கிய

# பிரார்த்தனை உரை

நாடு போற்றும் உத்தமர்கள் பலர் உளர். பல் துறைகளிலும் சார்ந்த அனேகர் ஏதாவதோர் துறையில் தம் தொண்டினையாற்றி நாட்டிற்கு நல்லவர்களாக வாழ முற்படுவது வழமை. இந்த வகையில் கந்தையா தணிகாசலம் அவர்கள் இளமையில் நன்முக வாழ்ந்து, முதுமையில் சமய சேவையில் ஈடுபட்டு, அத்துறையில் அபார நம்பிக்கையும் சுறுசுறுப்பும் கொண்டு அயராது உழைத்தமையை நாடு நன்கறியும். இதற்காக இவர் தேர்ந்தெடுத்தது துர்க்கை அம்பாள் ஆலயமாகும். காணும்போதெல்லாம் மிகுந்த குருபக்தியோடும், பேசும்போதெல்லாம் குரு விஸ்வாசத்தோடும், சம்பாஷனைகளின்போது சில தொண்டுகளோடு சார்ந்தும்; இப்படியிப்படியே பேச்சிலும் மூச்சிலும் சிந்தனையிலும் சிவ சம்பந்தமானவையே தணிகாசலம் கைக்கொண்டார். இதனால் சைவமும் சிறு குண்டுமணியிலாவது பயன் பெற்றது. தணிகாசலம் அவர்கள் சிவனடி சேர்ந்திருந்தாலும் அன்னாரது சேவைகளின் பெறுபேறுகளை சைவ உலகம் பெற்றே தீரும்.

அன்னாரது ஆத்ம சாந்திக்கு எமது பிரார்த்தனைகள் என்றுமுண்டு.

மஹாராஜஸ்ரீ சு. து. ஷண்முகநாதக் குருக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரும்பசிட்டி சன்மார்க்கசபைத் தலைவரும்,
சிற்பத்துறைக் கல்வி அதிகாரியுமான

# கலாகேசரி ஆ. தம்பித்துரை அவர்கள்

வழங்கிய

# ஆத்மசாந்தி உரை

அன்பு, அறம், நன்றி, விசுவாசம் போன்ற மனிதப் பண்புகள் நலிவுற்றுக் கயமைகள் பெருகிநிற்கும் இக்கால கட்டத்தில் கண்ணியம் என்ற ஒரு சொல் தமிழில் இருக்கின்றதே! அது யாருக்காக இருக்கின்றது? அது தெல்லிப்பழை தந்த பண்புமிகு அதிபர் அமரர் ஜெயரத்தினம் அவர்களுக்காகத்தான் இருக்கின்றது என்று நான் அடிக்கடி எண்ணுவது உண்டு. அவர் தம்மை அண்டியவர்களையும் கண்ணியம் உடையவர்களாக ஆக்கும் வல்லமை பெற்றவர்கள். அத்தகைய பெருந்தகை மூலம் சிவத்தமிழ்ச் செல்வி அவர்களுக்குத் 'துர்க்கா துரந்தரி' என்னும் விருது வழங்கும் நிகழ்வு தொடர்பாக முதல் முதலாக எனக்கு அறிமுகமானவர்கள் அமரர் தணிகாசலம் அவர்கள். கண்ணியம் என்ற சொல்லுக்கு இலக்கியமாகத் திகழ்ந்த ஒருவரோடு ஒன்றிணைந்ததினலே திரு. தணிகாசலம் அவர்களும் பண்பான ஒரு கண்ணியவான் என்பதை நாம் கூறவேண்டிய அவசியமில்லை.

அவ்விருது வழங்கும் வைபவத்தைத் தொடர்ந்து ஸ்ரீ துர்க்கா தேவிக்கு அமைக்கப்பெற்ற சித்திரத்தேர், சப்பரம், இராஜகோபுரம் போன்ற திருப்பணிகள் மற்றும் வருடா வருடம் நிகழும் வைபவங்கள் தொடர்பாகத் தேவஸ்தானச் செயலர் அமரர் தணிகாசலம் அவர்களுடன் அன்புரிமையுடன் நெருங்கிப் பழகியமையினல் அவர்களிடம் காணப்பெற்ற சில விசேட இயல்புகள் எம்மை உணரவும் சிந்திக்கவும் வைத்தன. பண்பட்ட உள்ளம் படைத்த அமரர் சில வேளைகளில் அரவம்போல் சீறுவதும், மறுகணம் அன்னைபோல் அரவணைப்பதும் உண்டு. சீரிய நேர்மையாளர்கள் இதற்கு விதிவிலகியவர்களல்லர். பிறர் தம் பாக்களிற் கண்ட குற்றங்களுக்காகத் தன் தலையில் எழுத்தாணியினற் குற்றிய சீத்தலைச் சாத்தனர் போன்றவர்களே சீரிய நேர்மையாளர்கள். இதன்வழி நின்ற பெருமையும் அமரர் அவர்களுக்கு உண்டு.

சேவை செய்வதிலே பேரார்வங்கொண்டு வாழ்ந்து, தன் பிறவி பயன்பட அன்னை பராசக்தியாம் துர்க்காதேவியைச் சரணடைந்து அவள் தம் சகலதிருப்பணிகளிலும் தன்னை முழுமையாக அர்ப்பணித்த இப்பெரியாரின் சேவைகள் இவ்வாலய வரலாற்றுடன் பின்னிப் பிணைந்து செழுமையுடன் நிலைநிற்கப்போகின்றன என்பது உண்மை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சண்மதப் பிரதித் தாபகரான சங்கராச்சாரிய சுவாமிகள் தமது இராஜ இராஜேஸ்வரி அட்டகத்திலே ஆதிபராசக்தியைப் பின்வருமாறு போற்றுகின்றார்:

"பலபல பிறவிகளில் பல பல தேவர்களை வழிபட்டு அதன் புண்ணிய வசத்தால் தேவியை வழிபடும் அடியார்களுக்கு அப்பிறப்பே முடிவாகி, அப்பிறப்பின் முடிவிலேயே சிவபதமுக்தியை அருள்பவளே பராசக்தி"......

இவ்வுண்மை நிலைக்கமைய சிவபதம் அடைந்துள்ள அமரர் தணிகாசலம் அவர்களின் பேரிழப்பால் துயருறும் ஒவ்வொருவரும் "இது எப்பவோ முடிந்த முடிவு" என்னும் யோகர் சுவாமிகள் திருவாக்கிற்கமைய ஆறுதல் பெற்று அமரர் அவர்களின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்போமாக!

ஓம் சக்தி! ஓம் சக்தி!!

**கலாகேசரி ஆ. தம்பித்துரை, S. L. E. A. S.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# எங்கள் இதய அஞ்சலி

அமரர் திரு. கந்தையா தணிகாசலம் அவர்கள் மறைவு தெல்லிப்பழை துர்க்காதேவி பக்தர்களுக்கு மிகவும் துயரத்தை அளித்துள்ளது. 1970ம் ஆண்டு தொடக்கம் இற்றை வரை அம்பாள் தொண்டில் திளைத்த பெருமகனுர் இன்று இல்லை என்பது ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

அமரர் அவர்கள் தமது 70 ஆண்டு வாழ்க்கையில் பெரும் பகுதியை பொதுத்தொண்டில் ஈடுபட்டு உழைத்த பெருமைக்கு உரியவர். அரசாங்கசேவையில் நீர்ப்பாசன திணைக்களத்தில் களஞ்சியப் பொறுப்பாளராக நற்சேவையாற்றி எல்லோரிடமும் நன்மதிப்பைப் பெற்றதுடன், இளமை தொடக்கம் தமது கிராமம் உற்ருர், உறவினர் மற்றும் நண்பர்களுக்கு தாமாகவே இயன்ற உதவிகளைச் செய்தமை நாம் எல்லோரும் அறிந்த தொன்ருகும்.

அவர் துர்க்கை அம்பாள் தேவஸ்தான நிர்வாகசபை உறுப்பினராக 1970ம் ஆண்டு நியமிக்கப்பட்ட சமயத்தில் அம்பாள் ஆலயம் புதுவிக்கும் பணிகள் ஒவ்வொன்ருக நிறைவேறி வந்த காலமாகும். திருப்பணிக்குரிய நிதி பற்ருக்குறை நிலவிய காலமும் அதுவாகும். அதனுல் அம்பாள் பக்தர்களை திருப்பணிகளில் ஈடுபடுத்த நாம் வீடு வீடாகச் சென்று நிதிசேகரிக்க நேரிட்டது. இச்சமயத்தில் அமரர் தணிகாசலம் அவர்கள் நிதிசேகரிக்கும் பணியில் விடாமுயற்சியுடன் ஈடுபட்டு வெற்றி ஈட்டினுர். அங்ஙனம் சேகரிக்கப்பட்ட நிதியைக் கொண்டு திருப்பணிகளை நிறைவேற்றுவதில் முன்நின்று உழைத்தார். அவர் இணைச்செயலாளராகச் சேவையாற்றிய காலப்பகுதியில் அம்பாள் ஆலயம் திருப்பொலிவுடன் மிளிர்வது அவருக்கு ஆத்ம திருப்தியை அளித்திருக்குமென்பது எமது நம்பிக்கை.

துர்க்காபுரம் மகளிர் இல்லம் தேவஸ்தான ஆதரவில் 1982ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட சமயம் தொடக்கம் அமரர் அவர்கள் அங்கு வதியும் பிள்ளைகளின் பராமரிப்புக்கு துர்க்கா துரந்தரி அம்மையார் அவர்களுக்கு உறுதுணையாக இயற்றிய பணிகளை நாம் என்றும் நினைவு கூரக் கடப்பாடுடையோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1987ம் ஆண்டு நடுப்பகுதியில் நாட்டின் இனக்கலவர வன்செயல்களில் சிக்கி அகதிகளாகத் தேவஸ்தானத்தில் தஞ்சம் புகுந்த மக்களுக்கு துயர் துடைக்கும் பணியை அவர் பொறுப்பேற்று தானும் தேவஸ்தானத்தில் தங்கியிருந்து ஆற்றிய அரும் பெரும் சேவையை நாம் நன்றி உணர்வுடன் நினைக்கப்பாலது.

இன்று தேவஸ்தான சூழலில் உள்ள நிழல் மரங்களும் பயன்தரு மரங்களும் கம்பீரமாக வளர்ந்து காட்சி அளிப்பது அவர் அவற்றை நாட்ட எடுத்த பெரு முயற்சியை அம்மரங்களே நினைவூட்டிய வண்ணம் இருக்கின்றன.

இங்ஙனம் துர்க்கை அம்பாள் தொண்டில் தீவிரமாக ஈடுபட்ட கர்மவீரன் மறைவு எமக்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். அவரின் குடும்பம் இனபந்துக்கள் எல்லோருக்கும் தர்மகர்த்தா சபையின் சார்பில் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல துர்க்கை அம்பாளைப் பிரார்த்திக்கின்றோம்.

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை
10-09-1989

**சு. சிவஞானசேகரர், B. A.**
பொதுச்செயலாளர்
தர்மகர்த்தாசபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# ஆடிச்செவ்வாயில் அம்பாள் அடி அடைதல்

''துன்ப முறவரினுஞ் செய்க துணிவாற்றி
யின்பம் பயக்கும் வினை'' — 669 குறள்

துன்பப்பட நேரிட்டாலும் பின் வாங்காமல் உலகத்துக்கு இன்பம் உண்டாக்கக்கூடிய நல்ல காரியங்களை வைராக்கியத்தோடு செய்யவேண்டும். (நாமக்கல் கவிஞர்)

அரசசேவையில் நற்சேவை செய்து இளைப்பாறி அம்பாள் அடித் தாமரைக்கு அடிமைபூண்டு ஒழுகி எம்மை எல்லாம் தம்முடன் அணைத்து அன்புகாட்டிய உத்தமர் தாம் சேரவேண்டிய நேரத்தை முன்கூட்டியே கணித்து எல்லோருக்கும் அன்னையாக வீற்றிருந்து அருள்பாலித்து அரசு வீற்றிருக்கும் உழுகொடைப்பதியாள் ஸ்ரீ துர்க்கா தேவியின் சிறப்பு நாளான ஆடிச் செவ்வாயன்று ஆனந்தத்துயிலில் ஆழ்ந்து அமைதிபெறலாயினுர். இவர்பெற்ற இன்ப வாழ்வு யார் பெறுவார் இவ்வுலகில்.

அமரர் தணிகாசலம் எமது காசி விநாயகர் ஆலயத்துடனும் மிகவும் நெருங்கிய தொடர்பு பூண்டவர். விசேட விழாக்களில் தாமும் பிள்ளைகளுடனும் வந்து தரிசனை செய்து போவதும், பாலர் ஞானோதய சபையின் நிகழ்ச்சிகளில் தவருது வருகை தந்து நல்லாதரவு நல்கி விழாக்கள் நிறைவுறும்வரை கலந்து போவதும் இவரது தலையாய கடமையாக இருந்துவந்துள்ளது.

அன்புள்ளம் நிறைந்த இவர் எமது இல்லத்து வாசலைக் கடந்தே அம்பாளிடம் போவதும் வருவதும், அவ்வாறு செல்லும் சந்தர்ப்பங்களில், எம்மைக் கண்டதும், பல வருடங்களாகக் காணுதவரை கண்டால் எவ்வளவு துடிதுடிப்பு, எவ்வளவு பரபரப்பு உண்டோ அதே போன்ற துடிப்பு. என்ன அன்பு, உடனே தரித்து நின்று உரையாடாது எம்மைவிட்டகலாத பெரிய பண்பாளர், இந்தப்பண்பு இவருக்கு இறைவி கொடுத்த பண்பு, இதே பாங்கில் எல்லோருடனும் இதமாக உரையாடும் உத்தமர்.

அம்பாள் ஆலயத்தில் இவர் ஆற்றிய தொண்டுகளை எங்கள் உள்ளங்களில் வீற்றிருந்து துணைபுரியும் துர்க்கா தேவி தேவஸ்தானத் தலைவி, செந்தமிழ்ச் செல்வி—அமரர் அவர்களது இறுதி யாத்திரையின்போது கூறிய ஞான்று கண்ணீர் கண்ணீராகச் சொரிந்து அஞ்சலி செலுத்தினேம்.

காசிவிநாயகப் பெருமானின் திருவடிகளை வணங்குவாம்.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**ம. சி. சிதம்பரப்பிள்ளை**
பாலர் ஞானோதய சபை ஆரம்ப இயக்குனர்.

காசிவிநாயகர் தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தணிகாசல நினைவு தரும் தணிவு

தேவத்தா னத்தினுயர் செம்மைச் செயற்றிறன்
மேவத்தா னம்போல் மிளிருக்கம் — ஏவத்தாய்
சத்திதுர்க்கைத் தொண்டு தணிகா சலசீலன்
பத்திவர்க்க மான பணி.

தெல்லியூர்ச் சீரான சீலப் பெருங்குடி
தொல்லிய லோர்மரபுத் தோன்றலிவர் — நல்லியல்போன்
கந்தையசு தன்தணி காசலம் தொண்டுபணி
சிந்தைய தாய்வாழ்ந்த சேய்.

அரசபணி ஆற்றலுடன் ஆற்றியே ஓய்வு
பரசுபெறத் துர்க்கா பதியில் — அரசுபுரி
அன்னைக்குத் தொண்டுநனி ஆண்டுகள் ஓயாது
முன்னின்று செய்தார் முயன்று.

காலையும் மாலையும் காண்போர்துர்க் காபுரத்தில்
வேலையோ தேவி வியன்பணி — காலையோர்
நோயுகுத்தும் வேளையும் நோன்பாகத் தொண்டினைத்
தாயுமைக்குச் செய்துவந் தார்.

மானுட வாழ்வு மகத்தான தொண்டுக்குத்
தானுட னலதன்று சங்கற்பம் — ஊனிடர்ந்தும்
தேவிதுர்க்கைச் சேவையே சிந்தையாய் ஆலயம்
மேவியதும் கண்டோம் வியந்து.

நிருவாகச் செம்மை நெறியான பீடம்
உருவாகப் பத்தர்கள் ஓர்ந்து — கருவான
துர்க்காதே வத்தானம் தொண்டின் துறைஅடிய
வர்க்காமென் றேநின்றார் வாழ்ந்து.

காசிப்பிள் ளையார் கடமை தவறுதார்
யோசிப்ப தெல்லாமோ யூகமாய்ப் — பேசிப்பின்
அன்பர் அடியார் அரன்பணிக் கீயவைத்தார்
மன்பதைக்குள் நல்ல மணி.

தணிகா சலத்தொண்டன் தாரணிக் கோர்நல்
அணிகான்! எனவே, அமரர் — பணிகாணக்
கூவி அழைத்திட்டார் கொள்வோம் தணிகையாய்
ஆவிஉடல் மாறலி தாம்.

மணமனை மக்கள் மருவு மகாரும்
குணமினி யர்-நற் குலச்சீர் — கணமும்
வழுவாது துர்க்கை மலரடி போற்றல்
தொழுவார் நெறியின் றொடர்.

**நம. சிவப்பிரகாசம்**
இந்துசாதனம் பத்திராதிபர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள்மிகு ஸ்ரீ துர்க்காதேவியின் தொண்டர்

# அமரர் திரு. க. தணிகாசலம்

துர்க்கா துரந்தரி சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களுடைய தலைமையிலே துர்க்காபுரம் ஒரு பெரிய சைவச் சமூக, சமய, கல்விச் சூழலுடையதாக உருவாகிக் கொண்டு வருகின்றது. இவ்வளர்ச்சிக்கு அச்சாணியாக நின்று உழைத்து வரும் நிறுவனம் ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானமாகும். இத்தேவஸ்தான சபையிலே நெடுங்காலமாகச் செயலாளராகப் பணிபுரிந்து வந்தவர் அமரர் க. தணிகாசலம் அவர்கள். துர்க்காபுரத்திலுள்ளவர்களெல்லாரும் ''மாமா'' என்று அன்புடன் அழைக்கப்பட்டுவந்த இவர் சிவத்தமிழ்ச் செல்வியின் சமூகப் பயன்பாடுள்ள தொலைநோக்குத் திட்டங்களை அமுற்படுத்தும் தொண்டர்களிலே ஒருவராகப் பணிபுரிந்து வந்துள்ளார்.

தொண்டிலே பொழுதைக் கழிப்பவர்கள் சிலரே. அச் சிலருள் அமரர் திரு. க. தணிகாசலமும் ஒருவர். அம்பாளைத் தரிசிக்கச் செல்லும் பொழுதெல்லாம் சிவத்தமிழ்ச் செல்வியின் உறவினர்களாகவும் அணுக்கத் தொண்டர்களாகவும் அமைத்து அம்பாளுக்கு அயராத அன்புடைய தொண்டர்களாக விளங்கும் திரு. தணிகாசலம் போன்றவர்களைக் காணும்போது, திருமாலுக்குக் கருடாழ்வாரும் ஆதிசேடனும், ஆஞ்சநேயரும் அமைந்துள்ள நிலையினையே நான் எண்ணுவதுண்டு.

சிலவருடப் பழக்கந்தான் எனக்கும் அவருக்கும் ஏற்பட்டிருந்தது. ஆனல், பல வருடங்கள் பழகியது போன்ற உணர்வினை அவருடைய தொடர்பு ஏற்படுத்தியது. அன்னருடைய சொல்லும் செயலும் எனக்கு அவர்மேல் மிகுந்த மதிப்பினையும் விருப்பினையும் ஊட்டின. மிகவும் ஆழ்ந்து சிந்தித்தே கருத்துக்களைக் கூறுவர். அவருடைய சொற்களிலோ செயலிலோ ஆரவாரம் இருப்பதில்லை.

அவருடைய இழப்பு துர்க்காபுரத்துக்கு ஒரு பேரிழப்பாகும். அங்குள்ளார் ஒவ்வொருவரும் அவ்விழப்பினை உணருகின்றனர். தொண்டனைக் கரையேற்றுகை செய்தல் அம்பாளின் அருட்செயலன்றோ! அம்பாளின் அருட்பார்வையிலே அவர் கலந்துவிட்டார். அமரர் தணிகாசலம் அவர்களுடைய தொண்டு எமக்கெல்லாம் வழிகாட்டியாக அமைந்து அம்பாளின் பணிக்கு ஆளாவோமாக.

தமிழ்த்துறை, பேராசிரியர் அ. சண்முகதாஸ்
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்,
திருநெல்வேலி,
14-09-1989.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள் மொழிகள்

1. அன்பாகவும் பிரியமாகவும் இருப்பது ஒரு தர்மம். தனக்குச் செய்த தவறை மறப்பதும் மன்னிப்பதுந் தர்மம். துயருறு பவனுக்கு ஒரு அன்பான வார்த்தை சொல்வதுந் தர்மம்.

2. உனது கவனத்தையெல்லாங் கையிலிருக்கும் வேலையிலேயே செலுத்து. இன்றைய தினத்தை ஒழுங்காக வாழ். நேற்றைய தினமோ பழமையோடு சேர்ந்து விட்டது. இனி அதிற் செய்வதற்கு ஒன்றுமில்லையாதலால் அதிற் கவனம் செலுத்த வேண்டாம். நாளையோ இன்னுந் தொலைவிலேயே இருக்கிறது. அது வரும்பொழுது வேலைசெய்யத் தேவையான நேரத்தையும் உடன் கூட்டிவரும். சென்றதையும் எதிர்காலத்தையும் நினைவிற் கொள்ளற்க. நிகழ்காலத்திலேயே வாழ்; வருங்காலந் தன்னைத் தானே கவனித்துக் கொள்ளும்.

3. நீ எதைச் செய்தாலும், எதை உண்டாலும், எதைத் தியாகஞ் செய்தாலும், எதைக் கொடுத்தாலும், உன்னை மேலடையச் செய்யும் எந்த முயற்சியைச் செய்தாலும் அதைக் கடவுளுக்கே அர்ப்பணம் என்று செய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவில்கிறோம்

எங்கள் குடும்பத்தலைவர் அவர்களின் மறைவையொட்டியும், இறுதிக் கிரியைகளை ஒட்டியும், பல வேறுவகையில் உதவி புரிந்தோர்க்கும், அஞ்சலியுரை வழங்கியோருக்கும், அனுதாபச் செய்தி அனுப்பியோருக்கும் இன்று 23-9-89இல் நடைபெறும் நினைவு நாள் நிகழ்ச்சியில் கலந்து கொள்வோருக்கும் எமது நன்றி உரித்தாகுக.

மனைவி, மக்கள்,
மருமக்கள், சகோதர சகோதரிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமகள் அழுத்தகம், சுன்னாகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org